நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## தரம்: இடைநிலை

**November 2005**

வினாக்கள் : 50

வழங்கப்பட்ட நேரம் : 65 நிமிடங்கள்
(கேள்விகள் வாசிப்பதற்கான நேரமும் இதில் உள்ளடங்கும்)

உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.

பெயர்: ______________________________

அடையாள இலக்கம்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

Read "திருக்குறள்" and answer questions 1 to 4
“திருக்குறள்” என்பதை வாசித்து 1 முதல் 4 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## திருக்குறள்

தமிழிலுள்ள அரிய நூல்களுள் திருக்குறளும் ஒன்றாகும். திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் பலநூறு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் வாழ்ந்த தமிழ்ப்புலவர். திருக்குறளில் ஆயிரத்து முன்னூற்று முப்பது பாக்கள் உள்ளன. இவை நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து குறட்பாக்கள் அமையப்பெற்றுள்ளன. குறட்பாக்கள் இரண்டே வரிகளைக் கொண்டவை. திருக்குறள் அறம், பொருள், இன்பம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதனால் திருக்குறள் ‘‘முப்பால்’’ எனவும் அழைக்கப்படுகிறது.

திருக்குறள் அனைவருக்கும் ஏற்ற பல நல்ல கருத்துகளைக் கூறுகிறது. குறள்கள் எமக்கு நல்வழி காட்டுகின்றன. இதனால் திருக்குறள் அறநூல், தமிழ்மறை, உலகப் பொதுமறை என்றெல்லாம் புகழப்படுகிறது. மேலும் திருவள்ளுவரை தெய்வப்புலவர், பொய்யாமொழிப்புலவர் என்றெல்லாம் போற்றுகின்றனர்.

திருக்குறள் பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உலகமகா இலக்கியங்களுள் ஒன்றெென மதிக்கப்படுகிறது. நாம் எல்லோரும் திருக்குறளைப் பொருள் விளங்கிக் கற்று அதன் வழியில் வாழ்வோம்.



அடுத்த பக்கத்தில் தொடரும்.

1. திருக்குறளை இயற்றியவர்

(a) திருமூலர்
(b) பாரதியார்
(c) திருவள்ளுவர்
(d) கண்ணதாசன்.

2. திருக்குறள் பற்றிய கூற்றுக்களுள் பிழையானது எது

(a) 1330 குறட்பாக்களைக் கொண்டது.
(b) 133 அதிகாரங்களைக் கொண்டது.
(c) குறட்பாக்கள் இரண்டே வரிகளால் ஆனவை.
(d) அறம், பொருள், இன்பம், வீடு என நான்காகப்பிரிக்கப்பட்டுள்ளது.

3. திருக்குறளின் சிறப்பினால் திருக்குறள் பின்வருமாறு புகழப்படுகிறது.

(a) தமிழ் மறை.
(b) திருப்புகழ்.
(c) திருமுறை.
(d) தமிழகராதி.

4. ‘‘கற்க கசடறக் கற்பவை கற்றபின்’’ எனும் குறளைப் பூர்த்தியாக்கும் வரி

(a) ‘‘பகவன் முதற்றே உலகு’’.
(b) ‘‘அன்றே மறப்பது நன்று’’.
(c) ‘‘நன்னயம் செய்து விடல்’’.
(d) ‘‘நிற்க அதற்குத் தக’’

அடுத்த பக்கத்தில் தொடரும்.

Read the poem "பாப்பாப் பாட்டு" & answer questions 5 to 8
"பாப்பாப் பாட்டு" என்ற பாடலை வாசித்து அதில் உள்ள தகவல்களைக் கொண்டு 5 முதல் 8 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# பாப்பாப் பாட்டு

ஓடி விளையாடு பாப்பா, – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா, – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

காலை யெழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

பொய் சொல்லக் கூடாது பாப்பா – என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா,
தெய்வ நமக்குத்துணை பாப்பா – ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.

சாதிகள் இல்லையடி பாப்பா, – குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்,
நீதி, உயர்ந்தமதி, கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

உயிர்க ளிடத்தில் அன்பு வேணும், – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்,
வயிர முடையநெஞ்சு வேணும், – இது
வாழும் முறைமையடி பாப்பா.

5. காலை எழுந்தவுடன் சிறுவர் சிறுமியர் செய்யவேண்டியது

(a) விளையாட வேண்டும்
(b) படிக்க வேண்டும்
(c) பாட வேண்டும்
(d) குழப்படி செய்ய வேண்டும்

6. மேலுள்ள பாட்டின்படி அமையாத கூற்று

(a) ஓடி விளையாட வேண்டும்
(b) உயிர்களிடத்தில் அன்பு காட்ட வேண்டும்
(c) பொய் சொல்ல வேண்டும்
(d) சாதிகள் இல்லை

அடுத்த பக்கத்தில் தொடரும்.

7. மேலோர் எனப்படுபவர்

(a) செல்வம் நிறைய உடையவர்கள்.
(b) பொய் சொல்பவர்கள்.
(c) உயர்சாதி மக்கள்.
(d) நீதி, உயர்ந்தமதி, கல்வி, அன்பு நிறைய உடையவர்கள்

8. இப்பாட்டில் பாரதியார் கூறுவது

(a) பாப்பாவுக்கு அறிவுரை
(b) தமிழரின் பெருமை
(c) பாப்பாக்களின் குறும்பு
(d) தமிழ்மொழியின் சிறப்பு

For questions 9 to 11 choose the word that is spelt incorrectly in the given sentence.
9 முதல் 11 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் உள்ள சொற்களுள் பிழையாக எழுதப்பட்டுள்ள சொல்லைக் காட்டுக.

9. நமது தாய்மொழியாம் தமிள் தொன்மையானது.

(a) தமிள்
(b) நமது
(c) தாய்மொழியாம்
(d) தொன்மையானது

10. அவுஸ்திரேலியா பல்ளின மக்கள் வாழும் தேசமாகும்.

(a) மக்கள்
(b) வாழும்
(c) பல்ளின
(d) தேசமாகும்

11. இயற்க்கையின் அழகு அற்புதமானது வியக்கத்தக்கது.
(a) அழகு
(b) வியக்கத்தக்கது
(c) அற்புதமானது
(d) இயற்க்கையின்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

For questions 12 and 13 show the correct spelling of the underlined word that is spelt incorrectly.
12ம் 13ம் வினாக்களில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொல் பிழையாக (தப்பாக) எழுதப்பட்டுள்ளது. அதை சரியாக எழுதுவது எப்படியெனக் காட்டுங்கள்.

12. வாழைப்பளம் நல்லதொரு சத்துணவாகும்.

(a) வாழைப்பழம்
(b) வாளைப்பழம்
(c) வாளைப்பளம்
(d) வாயைப்பழம்

13. நாளை தேத்திருவிழா நடக்கவிருக்கின்றது.

(a) தேத்திருவிளா
(b) தேர்த்திருவிழா
(c) தேர்த்திருவிளா
(d) தேர்திருவிழா

For questions 14 to 18 choose the best word for each space.
14 முதல் 18 வரையுள்ள வினாக்களுக்கு ஒவ்வொரு இடைவெளிக்கும் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

## கலைவிழா

நாளை நமது வருடாந்தக் கலைவிழா ( 14 ). இன்று நாம் எல்லோரும் அதற்கான ( 15 ) செய்துகொண்டிருக்கின்றோம். ( 16 ) கண்டு களிக்க பலர் ( 17 ) என எதிர்பார்க்கிறோம். ( 18 ) வருவீர்களா?

| | | | |
|---|---|---|---|
| 14. | (a) நடைபெற்றது<br>(b) நடந்தது<br>(c) நடைபெறவிருக்கிறது<br>(d) நடந்தன | 15. | (a) ஆயத்தங்களை<br>(b) ஆயத்தங்களுக்கு<br>(c) ஆயத்தங்களால்<br>(d) ஆயத்தங்களுக்கான |
| 16. | (a) கலைவிழா<br>(b) கலைவிழாவினைக்<br>(c) கலைவிழாவால்<br>(d) கலைவிழாவிற்காக | 17. | (a) வந்தார்கள்<br>(b) வந்தனர்<br>(c) வருவார்கள்<br>(d) வந்திருக்கிறார்கள் |
| 18. | (a) நாங்களும்<br>(c) அவர்களும் | | (b) நீ<br>(d) நீங்களும் |

For questions 19 to 21 choose the word that is closest in meaning to the underlined word.
19 முதல் 21 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லுக்கு மிகவும் பொருத்தமான சொல்லை காட்டுக.

| | |
|---|---|
| 19. வாய்மையே வெல்லும்<br>(a) பொய்யே<br>(b) உண்மையே<br>(c) வல்லமையே<br>(d) கதையே | 20. நாள்தோறும் உடற்பயிற்சி செய்தல் உடம்புக்கு நல்லது.<br>(a) தினமும்<br>(b) எப்பொழுதாவது<br>(c) இடைக்கிடை<br>(d) நாளையதினம் |
| 21. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசுகளை வழங்கினார்.<br>(a) அறிவித்தார் (b) அழித்தார்<br>(c) அளித்தார் (d) எடுத்தார் | |

For questions 22 and 23 choose the word that is opposite in meaning to the underlined word.
22ம் 23ம் வினாக்களில் கோடிட்ட சொல்லுக்கு எதிர்க்கருத்துள்ள சொல்லை காட்டுக.

| | |
|---|---|
| 22. சுத்தம் சுகம் தரும்.<br>(a) சுகாதாரம்<br>(b) துப்பரவு<br>(c) சத்தம்<br>(d) அசுத்தம் | 23. தோல்விகளைக் கண்டு ஒருபோதும் மனந்தளராதே..<br>(a) துயரங்களைக்<br>(b) துன்பங்களைக்<br>(c) வெற்றிகளைக்<br>(d) இன்பங்களைக் |

அடுத்த பக்கத்தில் தொடரும்.

For questions 24 and 25 choose the answer that combines the sentences in the best way.
வினாக்கள் 24, 25 இல் தரப்பட்ட வசனங்களை (வாக்கியங்களை) சரியான ஒழுங்கில் அமைத்துக் காட்டுக.

24. (1) செய்தியைக் கேட்டதும் குழந்தையைப் பார்ப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்றோம். அங்கே
(2) குழந்தை பிறந்த செய்தியைக் கேள்விப்பட்டோம்.
(3) குழந்தையைப் பார்த்தபின் மகிழ்ச்சியாக வீடு திரும்பினோம்.
(4) குழந்தை அழகாகச் சிரித்தபடி தாயின் மடியில் இருந்தது.

**(a)** (1), (2), (3), (4)
**(b)** (3), (2), (4), (1)
**(c)** (2), (1), (4), (3)
**(d)** (4), (3), (1), (2)

25. (1) தண்ணீர் கொதித்தவுடன் கொதிநீரை தேயிலை இருந்த கோப்பையில் ஊற்றினேன்.
(2) தேனீரைப் பருகினேன், சுவையாக இருந்தது.
(3) தண்ணீரைக் கொதிக்க வைத்தேன்.
(4) அதன் பின் சீனியை அளவாகப் போட்டு கலக்கினேன்.

**(a)** (2), (3), (4), (1)
**(b)** (4), (3), (2), (1)
**(c)** (1), (3), (2), (4)
**(d)** (3), (1), (4), (2)

For questions 26 and 27 choose the best word for each space.
26ம் 27ம் வினாக்களுக்கு ஒவ்வொரு இடைவெளிக்கும் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

26. மனிதருக்கு வீடு போல பறவைகளுக்கு ____________ .
(a) வானம்
(b) பழம்
(c) கூடு
(d) கடல்

27. முத்தமிழ் எனப்படுவது இயல், இசை, ______________.

(a) கதை
(b) நாடகம்
(c) கவிதை
(d) பாட்டு

For questions 28 to 30 choose the answer that is best suitable.
28 முதல் 30 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லை அல்லது சொற்றொடரை பின்வருவனவற்றில் தெரிக.

28. நாமனைவரும் ஒன்று சேர்ந்து தமிழ் மொழி வாழ்த்து _______

(a) பாடின
(b) பாடினோம்
(c) பாடினேன்
(d) பாடினார்கள்

29. _______ நாளை நடக்கவிருக்கும் இசை நிகழ்ச்சக்கு வருவாயா?

(a) நாங்கள்
(b) அவர்கள்
(c) நீ
(d) நீங்கள்

30. _______ சிறந்ததொரு கோயிலுமில்லை.

(a) தாயால்
(b) தாய்க்காக
(c) தாய்
(d) தாயிற்

For questions 31 to 35 choose the answer that is best suitable.
31 முதல் 35 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைக் காட்டுக.

31. நான் இவ்வளவு __________ நீ என் பேச்சைக் கேட்கவில்லை.
(a) சொல்லியும்
(b) சொன்னால்
(c) சொல்லியிருந்தால்
(d) சொன்னாலன்றி

32. நாம் தமிழ் மொழியை _______ கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாத்தல் வேண்டும்.

(a) மாத்திரம்
(b) அத்துடன்
(c) மட்டும்
(d) மட்டுமன்றி

33. ____________________ பிள்ளை பால் குடித்தது.

(a) அழுதால்
(b) அழுத
(c) அழுதிருந்தால்
(d) எல்லாம் சரி

34. ‘அறையைச் சுத்தம் ________________’ என்று தந்தை மகனிடம் கூறினார்.

(a) செய்யும்படி
(b) செய்யுமாறு
(c) செய்
(d) செய்து

35. நீ __________________ இங்கு வந்து பத்து நாட்களாகின்றன.

(a) இன்றிலிருந்து
(b) இன்றைக்கு
(c) இன்று
(d) இன்றுடன்

Read the text "சுனாமி (TSunami)” and answer questions 36 to 40.
“சுனாமி” என்பதை வாசித்து 36 முதல் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## சுனாமி
## (TSunami)

கடந்த ஆண்டு மார்கழி மாதம் 26ம் திகதி சுனாமி ஏற்படுத்திய அனர்த்தம் மறக்க முடியாததும் இன்றும் உலகெங்கும் உள்ள மக்களை உலுக்குவதும் ஆன ஒரு நிகழ்வாகும். இந்த இயற்கையின் பெருஞ்சீற்றம் இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளை மூர்க்கமாகத் தாக்கிப் பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் பெருந்தொகையான உடமைகளையும் அழித்துள்ளது. உலக நாடுகளினதும் உலகெங்கும் வாழும் மக்களினதும் ஏகோபித்த மனிதாபிமான உதவி, சுனாமி மூலம் பாதிக்கப்பட்டவர்கள் ஓரளவிற்கேனும் மீண்டும் இயல்பு நிலைக்குத்திரும்ப உதவியது.

சுனாமி என்பது ஜப்பானிய மொழிச்சொல். ‘‘துறைமுக அலைகள்’’ என்று அதற்குப் பொருள். ஜப்பானிய கடற்கரையை அடிக்கடி தாக்கியழிப்பதால் அவற்றிற்கு ஜப்பானிய மொழியிலேயே பெயர் வந்துவிட்டது.

பூமியின் மேற்பரப்பு 7 கண்டத் தட்டுகளால் ஆனது. இதில் ஏதாவது இரண்டு கண்டத் தட்டுகள் ஒன்றுடன் ஒன்று மோதும்போது பூகம்பம் ஏற்படும் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். இப்படித்தான் மார்கழி 26ம் திகதியன்றும் ஆசிய மற்றும் அவுஸ்திரேலிய கண்டத்தட்டுக்கள் சுமாத்திரா தீவுக்கு அருகேமோதிக்கொண்டன. இந்தமோதல் என்பது ஒரே நாளில் நடப்பது அல்ல. பல ஆண்டுகளாக மோதி மோதி ஏராளமான சக்தி அடைபட்டுக்கிடந்து ஒரு நாள் வெடித்துவிடும். இந்த பூகம்பம் அணுகுண்டுகளின் சக்திக்கு நிகரானதாகும். இதனால் கடல்நீர் மிகுந்த

அடுத்த பக்கத்தில் தொடரும்.

அழுத்தத்துடன் தள்ளப்ட்டு கடல் நீரின் அடித்தளத்தில் மிகுந்த வேகத்துடனான நீரோட்டமொன்று உருவாகி கரையை நோக்கிப்பயணிக்கும். இப்படி கடலுக்கடியில் பயணம் செய்யும் சுனாமி அலைகள் கரையைக் கடக்கையில் பேரழிவினை ஏற்பபடுத்துகிறது.

பசிபிக்கடலில்தான் இந்த சுனாமி அழிவு அடிக்கடி ஏற்படும். இதைத்தடுப்பதற்கு வழியேதும் இல்லை. பசிபிக்கடலோர நாடுகள் அமெரிக்காவுடன் இணைந்து சுனாமி கண்காணிப்பு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றன. இவ்வமைப்பு இப்பேரலைகள் வரும்போது கடலோர மக்களை எச்சரித்து அப்புறப்படுத்தி வருகின்றன.
இப்பேரழிவினைப் பாடமாக எடுத்து இனியாவது இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், இந்தோனேசியா போன்ற நாடுகள் ஒருங்கிணைந்து இது போன்ற அமைப்பை உருவாக்கி மக்களைக் காக்கவேண்டும்.

36. சுனாமி உலகை உலுக்கியது

(a) மார்கழி மாதம் 26ம் திகதி 2004இல்
(b) மார்கழி மாதம் 26ம் திகதி 2003இல்
(c) மார்கழி மாதம் 26ம் திகதி 2000இல்
(d) பங்குனி மாதம் 26ம் திகதி 2005இல்

37. சுனாமியில் பாதிப்புற்றோர் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்ப உதவியது

(a) விஞ்ஞான வளர்ச்சி
(b) உலகமக்கள் யாவரினதும் ஏகோபித்த மனிதாபிமான உதவி
(c) அரசியல் திருப்பம்
(d) பொருளாதார மேம்பாடு

38. “சுனாமி” என்பது

(a) துறைமுக அலைகள் என்று பொருளமைந்த அமெரிக்கச் சொல்
(b) துறைமுக அலைகள் என்று பொருளமைந்த சீனச் சொல்
(c) துறைமுக அலைகள் என்று பொருளமைந்த ஜப்பானியச் சொல்
(d) வடமொழிச் சொல்

39. சுனாமி பற்றிய கூற்றுகளுள் பிழையானது

(a) சுனாமி, பூமியின் கண்டத்தட்டுகள் மோதுவதால் கடல் நீர் மிகுந்த அழுத்தத்துடன் அழுத்தப்பட்டு ஏற்படும் கடற் கொந்தளிப்பினால் ஏற்படுகிறது.
(b) கடந்த சுனாமி ஆசிய அவுஸ்திரேலிய கண்டங்கள் சுமாத்திரா தீவுக்கு அருகே மோதியதால் நடந்தது.
(c) பசிபிக் கடலில் சுனாமி அடிக்கடி ஏற்படும்.
(d) சுனாமியைத் தடுப்பதற்கு பல வழிகள் உண்டு.

40. கடந்த ஆண்டு சுனாமியில் பாதிப்புக்குள்ளாகாத நாடு

(a) இந்தியா
(b) அவுஸ்திரேலியா
(c) இலங்கை
(d) இந்தோனேசியா

அடுத்த பக்கத்தில் தொடரும்.

Read the following conversation and answer questions 41 to 45
கீழுள்ள உரையாடலை வாசித்து விளங்கி 41 முதல் 45 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

நிலா, ரவி, மதன் மூவரும் பாடசாலையின் மதிய இடைவேளையின் போது பலதும் பத்தும் கதைத்தவாறு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரென ரவியின் நடமாடும் தொலைபேசி ஒலித்தது. ரவி தொலைபேசியில் அழைத்த நண்பனுடன் சிறிது நேரம் கதைத்துவிட்டு இணைப்பைத் துண்டித்தான். அதன் பின் மூவரினதும் உரையாடல் தகவற்பரிமாற்றத்தின் பக்கம் திரும்பியது.

ரவி: பார்த்தீர்களா! தகவற்பரிமாற்றத்தின் அதீத வளர்ச்சியை.

நிலா: ஆமாம் உண்மைதான், இன்றைய விஞ்ஞான வளர்ச்சி தகவற்பரிமாற்றத்திலும் பல மாற்றங்களை உருவாக்கியுள்ளது.

மதன்: நிலா, எனக்கு இது அவ்வளவாக விளங்கவில்லை. நாம் பாவிக்கும் தகவல் தொடர்பு சாதனங்கள் எவை? கொஞ்சம் சொல்வாயா?

நிலா: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, தபால்.

ரவி: முக்கியமானதைச் சொல்லவில்லையே.

நிலா: அது என்ன?

ரவி: கணினி (Computer)

மதன்: அது சரி, கணினி எவ்வாறு தகவற்றொடர்புக்கு உதவுகிறது?

ரவி: கணினியில் இணைய இணைப்பை (Internet) ஏற்படுத்தின் உலகின் பல்வேறு பாகங்களில் உள்ளவர்களுடன் மின்னஞ்சல் (e-mail) மூலம் தொடர்பு கொள்ளவும், உரையாடவும் முடியும்.

நிலா: மேலும் பல்வகைப்பட்ட இணையத் தளங்களிலிருந்தும் (Website) தேவையான தகவல்கள் அனைத்தினையும் பெற்றுக்கொள்ளலாம்.

மதன்: அப்படியானால் இணையத்தளத்தில் இல்லாததென்று ஒன்றில்லை.

ரவி: ஆமாம், இணையத்தளத்தினைத் தகவல் மையமெனலாம்.

மதன்: கணினி வேறு எதற்குப் பயன்படும்?

நிலா: கணினியில் பெருந்தொகையான தகவல்களை சேமித்து வைக்கவும் முடியும்.

ரவி: தகவற்பரிமாற்றத் துறையில் கணினியின் கண்டு பிடிப்பு ஒரு மைல் கல்லாகும்.

நிலா: அறிவை வளர்ப்பதற்கு மட்டுமன்றி, நல்லதொரு பொழுதுபோக்கு சாதனமாகவும் பயன்படுகிறது கணினி.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

ரவி: இன்று நம் வாழ்வோடு கணினியும் இணைந்து விட்டது. ஒரு மனிதனுக்கு கல்வி அறிவு எவ்வளவுக்கெவ்வளவு முக்கியமோ அது போன்று கணினி அறிவும் மிகவும் அவசியமாகும்.

மதன்: எல்லாம் சரி, ஆரம்ப காலத்தில் தகவற்பரிமாற்றத்திற்கு மனிதன் எவற்றைப் பயன்படுத்தினான்?

ரவி: நிலா, உனக்கேதேனும் தெரியுமா?

நிலா: முரசு, தீ, புறா போன்றவை தகவற்பரிமாற்றத்திற்கு உதவியதாக தாத்தா கூறினார்.

மதன்: தகவற்பரிமாற்றத்துறையைத் தான் ஆங்கிலத்தில் Information Technolgy என்பார்களா?

ரவி: ஆமாம் மதன், IT என்றும் கூட சுருக்கமாகச் சொல்வார்கள்.

மதன்: ரவி, நிலா, நேரத்தைப் பார்த்தீர்களா? நேரம் போனதே தெரியவில்லை!

நிலா, ரவி, மதன்: இன்று மதிய நேரம் பயனுடையதாகக் கழிந்தது.



அடுத்த பக்கத்தில் தொடரும்.

41. இந்த கலந்துரையாடலில் _____________ பங்கு பற்றினர்.

(a) மூவர்
(b) நால்வர்
(c) இருவர்
(d) பலர்

42. பின்வருவனவற்றுள் தகவல் தொடர்பு சாதனங்கள் அல்லாதது.

(a) பத்திரிகை
(b) தொலைபேசி
(c) கணினி
(d) குளிர்சாதனப் பெட்டி

43. கணினி பற்றிய கூற்றுகளுள் பிழையானது எது?

(a) கணினியில் இணைய இணைப்பு இருப்பின் உலகெங்கும் உள்ளவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.
(b) கணினியின் கண்டு பிடிப்பு தேவையற்ற ஒன்றாகும்.
(c) கணினியில் பெருந் தொகையான தகவல்களை சேமிக்க முடியும்.
(d) கணினி ஒரு பொழுதுபோக்கு சாதனமாகவும் பயன்படுகிறது.

44. ஆரம்ப காலங்களில் தகவற்பரிமாற்றத்திற்கு மனிதன் உபயோகித்தது.

(a) முரசு
(b) தீ
(c) புறா
(d) மேற்கூறியவை அனைத்தும்.

45. இக்கலந்துரையாடலில் இருந்து தகவற்பரிமாற்றத்தினால்

(a) உலகம் சுருங்கி விட்டது எனலாம்.
(b) உலகம் விரிந்து விட்டது எனலாம்.
(c) உலகம் பரந்து விட்டது எனலாம்.
(d) உலகம் அழிந்து விட்டது எனலாம்.

For questions 46 and 47 choose the sentence that best describes the meaning of the given idiom.
46ம் 47ம் வினாக்களுக்கு தரப்பட்ட மரபுத்தொடரை சரியாக உணர்த்தும் வாக்கியம் (வசனம்) எது?

46. கீழ்காணும் வாக்கியங்களுள் எது மரபுத்தொடரை சரியாக உணர்த்துகின்றது?
‘தலையைத் தடவுதல்’

(a) தலைக்கு எண்ணெய் வைத்துப் பூசுதல்.
(b) ஆசிரியர் முதலாவதாக வந்த மாணவனின் தலையைத் தடவிக் கொடுத்தார்.
(c) அவன் என்னிடம் வாங்கிய கடனை இன்று தருவேன் நாளை தருவேன் என்று கூறிக்கூறி ஏமாற்றினான்.
(d) தலையை மொட்டையடித்தலைக் குறிக்கும்.

47. கீழ்காணும் வாக்கியங்களுள் எது மரபுத்தொடரை சரியாக உணர்த்துகின்றது?
‘அரைத்த மாவை அரைத்தல்’

(a) தலைவர் தன்னுரையில் ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் கூறியதால் பார்வையாளர் சலிப்புற்றனர்.
(b) மாவை மீண்டும் மீண்டும் அரைத்தால் தான் உணவு சுவையுறும்.
(c) அரைத்த மாவை அரைத்தல் இயலாததொன்றாகும்.
(d) அரைத்த மாவை மீண்டும் மீண்டும் அரைத்தால் மா அரிசியாகுமா?.

For questions 48 to 50 choose the sentence that best describes the meaning of the given phrase in usage.
48 முதல் 50 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட உவமைத் தொடரை சரியாக உணர்த்தும் வாக்கியம் (வசனம்) எது?

48. கீழ்காணும் வாக்கியங்களுள் எது உவமைத்தொடரைச் சரியாக உணர்த்துகின்றது?
‘சூரியனைக் கண்ட பனிபோல’

(a) அவன் சூரியனைக் கண்ட பனிபோல அழுதான்.
(b) குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டதும் சூரியனைக் கண்ட பனிபோல மகிழ்ந்தாள்.
(c) வேலை கிடைத்ததும் அவனது பிரச்சினைகள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல மெல்ல மெல்ல விலகியது.
(d) அவன் பாம்பைக் கண்டதும் சூரியனைக் கண்ட பனிபோல பயந்தான்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

49. கீழ்காணும் வாக்கியங்களுள் எது உவமைத்தொடரைச் சரியாக உணர்த்துகின்றது?
‘பசுமரத்தாணி போல’

(a) இளமையிற் கற்பது பசுமரத்தாணி போல் இலகுவில் மறந்து விடும்.
(b) அவன் பார்ப்பதற்கு பசுமரத்தாணி போல் அமைதியாக இருந்தான்.
(c) இளமையிற் கற்பவை பசுமரத்தாணி போல் இலகுவாகவும் ஆழமாகவும் மனதில் நிலைத்து நிற்கும்.
(d) அவனிற்கு பசுமரத்தாணி போல் விடயங்கள் எதுவுமே புரியவில்லை.

50. கீழ்காணும் வாக்கியங்களுள் எது உவமைத்தொடரைச் சரியாக உணர்த்துகின்றது?
‘குரங்கின் கையில் பூமாலை போல்’

(a) சிறுமி புத்தகத்தை குரங்கின் கையில் பூமாலை போல கவனமாகப் பாதுகாத்து வைத்திருந்தாள்.
(b) குரங்கு கையில் பூமாலையை வைத்திருந்தது.
(c) குரங்குக்கு பூமாலை விருப்பமில்லை.
(d) புத்தகத்தின் அருமை தெரியாத சிறுவன் அதனை குரங்கின் கையில் பூமாலை போலக் கிழித்தெறிந்தான்.

இதுவே இறுதிப் பக்கம்.